2005 மார்ச் 4]

கூட்டுறவு வங்கியின் ஒப்புதல் பெற்று கலைக்கப்பட்டுவிட்ட நிலையில், இதனைப் புத்துயிரூட்டித் திறக்க அவசியம் எழவில்லை. மேலும், கலைக்கப்பட்ட வெங்கம்பாக்கம் விவகார எல்லையிலுள்ள கிராம மக்கள், தொடர்ந்து கூட்டுறவு வங்கியின் சேவைகளைப் பெற ஏதுவாக இக் கிராமங்கள், அருகிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுடன்தான் இணைக்கப்பட்டுள்ளன என்கிற தகவலைச் சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. அன்பழகன்.*

திரு. கு. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை கூட்டுறவு வங்கிகள் மூடப்பட்டுள்ளன? அப்படி மூடப்பட்டுள்ள கூட்டுறவு வங்கிகளைத் திறப்பதற்கு... (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *தனிக் கேள்வி போடவும் வினா எண் 65, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

65—

நியாய விலைக் கடை

***53517—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், சங்கராமநல்லூர் பேரூராட்சி, என்.ஜி. புதூரில், நியாய விலைக் கடை அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலை வட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், சங்கராமநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட என்.ஜி. புதூரில் முழுநேர நியாய விலைக் கடை, 952 குடும்ப அட்டைகளுடன், 1-4-1979 முதல், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே, என்.ஜி. புதூரில், நியாய விலைக் கடை இயங்கி வருவதால், மேலும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2005 மார்ச் 4

முற்பகல் 10-20

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடுமலை வட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், சங்கராமநல்லூர் பேரூராட்சி, என்.ஜி. புதூரில், அந்த பேரூராட்சிக்கு உட்பட்ட 6 கிராமங்களுக்கு நியாய விலைக் கடை இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 952 அட்டைகள் இருப்பதாகக் கூறினார்கள். அங்கே மூன்று கிராமங்களை உள்ளடக்கிய மயிலாபுரம், மடத்தூர் ஆகிய பகுதிகளிலே 600 அட்டைகளுக்குப் பக்கம் உள்ளன. அங்கே பகுதிநேர நியாய விலைக் கடை ஒன்றை அமைக்க நம்முடைய அரசு முன்வருமா என்பதையும் கேட்டு, என்னுடைய உடுமலைத் தொகுதியிலே, பல இடங்களிலே 900 அட்டைகள், 1,000 அட்டைகள் உள்ள பகுதிகள், சின்னவீரன்பட்டி, உடுமலை நகரத்திலே சாதிக் நகர், பெரியகோட்டை ஊராட்சியிலே சிவசக்தி காலனி, மடத்துக்குளம் ஊராட்சியிலே பெரியவட்டாரம் பகுதி—எஸ்சி. மக்கள் அதிகம் உள்ள பகுதி—போடிபட்டி பகுதியிலே காமராஜர் நகர் ஆகிய இடங்களிலே முழு நேரக் கடை அல்லது பகுதி நேரக் கடை வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டுள்ளேன். அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக நகராட்சிப் பகுதிகளில் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமல் ஒரு நியாய விலைக் கடையும், கிராமப்புறங்களில், ஊரகப் பகுதிகளில் 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளும், குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்கின்ற அளவில்தான் நியாய விலைக் கடைகள் ஆங்காங்கு செயல்பட்டு வருகின்றன. தேவையான இடங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசுக்கு மனுச் செய்வார்களானால், அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் எத்தனை நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

2005 மார்ச் 4]

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக 62 நியாய விலைக் கடைகளும், கூட்டுறவு நிறுவனங்கள் சார்பாக 1,468 நியாய விலைக் கடைகளும், ஏனைய கூட்டுறவு நிறுவனங்களின் சார்பாக 30 நியாய விலைக் கடைகளும், பெண்களால், மகளிர் சுய உதவிக் குழுக்களின் சார்பாக நடத்தப்படும் 76 நியாய விலைக் கடைகளும், நடமாடும் நியாய விலைக் கடைகள் 5-ம், ஆகக்கூடி 1,641 நியாயவிலைக் கடைகள் கோவை மாவட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற தகவலைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு இப்போது புதிதாக தமிழகமெங்கும் புதிய ரேஷன் அட்டைகள் வழங்குகின்ற பணியை மேற்கொண்டு சிறப்பாக அவையெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஒவ்வோர் இடத்திலும் கூடுதலான பயனாளிகள் வருகின்ற ஒரு சூழல் இருக்கின்ற நிலையில், பல்வேறு இடங்களில் இந்தக் கடைகள் அதிகப்படுத்த வேண்டிய ஒரு நிலை இருக்கின்ற சூழல். அப்படிப்பட்ட நிலையில், தனியாக ஒரு கடை அமைக்கப்பட்டு, அதிலே அதிகப்படியான அட்டைகள் இருக்கின்ற நிலையில், எத்தனை அட்டைகள் இருந்தால் புதிதாக ஒரு நியாய விலைக் கடை அமைக்கப்படும்? ஏற்கெனவே இரண்டு மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் இருக்கின்ற கடைகளுக்கு மக்கள் சென்று வாங்குகின்ற நிலை, கஷ்டமாக இருக்கிறது என்கின்ற நிலையில், அவற்றையெல்லாம் பிரித்து, துணை நியாய விலைக் கடைகள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு நியாய விலைக் கடைக்கும், இன்னொரு நியாய விலைக் கடைக்கும் இடையிலே 2 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். தற்போதுள்ள நடைமுறைகளின்படி, 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேலாக இருக்கின்ற பகுதிகளிலே குடும்ப அட்டைகளினுடைய எண்ணிக்கைக்குத் தக்கவாறு பிரித்து, பகுதி நேர நியாய விலைக் கடைகளும் அமைக்கப்படுகின்றன என்கின்ற தகவலைச் சொல்லிக்கொண்டு அமர்கிறேன்.